சுருக்கம்

தமிழ்நாடு அமைச்சுப்பணி – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – வேலைவாய்ப்புப் பிரிவு – திருமதி த.நித்யகல்யாணி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், அரியலூர் அலுவலகத்தில் நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (என்.2) துறை

அரசாணை (2டி) எண்: 68 நாள்: 07.11.2023

சோபகிருது வருடம், ஐப்பசி–21

திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ) துறை, நாள் 23.01.2020.
2. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், அரியலூர் அவர்களது செயல்முறை ஆணை எண்.அ1/6227/2021, நாள் 29.08.2022.
3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரின் கடிதம் எண்.நிர்2/20294/2021 நாள். 28.08.2023 மற்றும் 18.10.2023.

-----

ஆணை:–

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின், வேலைவாய்ப்பு பிரிவில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், அரியலூர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.வீ.பெ.இரா.மணிவேல் அவர்கள் 15.02.2021 அன்று அரசுப் பணியில் இருந்தபோது மறைந்ததையொட்டி, அவரது மறைவிற்குப் பின் போதிய வருமானமின்றி அவரது குடும்பம் வறுமையில் வாடுவதாகத் தெரிவித்து, அவர்களின் மனைவி திருமதி.த.நித்யகல்யாணி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி நியமனம் வழங்குமாறு கோரியிருந்தார் என்றும், அவரது குடும்பத்தில் எவரும் அரசுப் பணியிலோ, தனியார் துறையிலோ பணிபுரியவில்லை என்பதாலும், அவரது குடும்பம் வறுமையில் வாடுவதைக் கருத்தில் கொண்டும் மறைந்த அரசுப் பணியாளரின் வாரிசுதாரரான திருமதி.த.நித்யகல்யாணி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கலாமென முடிவெடுக்கப்பட்டது என்றும்,

(த.பி.பா.)

அதனைத் தொடர்ந்து திருமதி.த.நித்யகல்யாணி அவர்களுக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி பணி நியமனம் வழங்கப்பட்டது என்றும், அப்பணியாளர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், அரியலூர் அலுவலகத்தில் 08.09.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகின்றார் என்றும் தெரிவித்து, அவரது பணியினை வரன்முறை செய்யுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின் கருத்துருவினை கருணை அடிப்படையிலான பணி நியமனம் செய்தல் தொடர்பாக மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு கவனமுடன் பரிசீலித்து திருமதி.த.நித்யகல்யாணி, இளநிலை உதவியாளர், அவர்களது பணியினை, அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 08.09.2022 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் வரன்முறை செய்து ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் தனது ஆண்டு ஊதிய உயர்வு விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி,
சென்னை–600 032.
திருமதி.த.நித்யகல்யாணி, இளநிலை உதவியாளர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், அரியலூர். (வழி: ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை–600 032.)

<u>நகல்</u>
அரசு கூடுதல் தலைமை செயலாளரின் முதுநிலை முதன்மை
தனிச் செயலர், தொழிலாளர் நலன் மற்றும் திறன்
மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.
அரசு துணைச் செயலாளரின் முதுநிலை நேர்முக எழுத்தர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (அநமு–2) துறை,
சென்னை–600 009.
சுத்த நகல் கோப்புக்கு (efile/4590/என்2/2023)
இருப்பு கோப்பு / உபரி நகல்.

நகல் பெற்றுக்கொண்டேன்
30/11/23

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

07/11/2023
பிரிவு அலுவலர்

7/11/2023

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்,
மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
பெரம்பலூர்.